**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 112/2020**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 6 |
| Name (திரு/திருமதி) | : சரவணன் |
| Father's Name/ Husband's Name | : பரமசிவம் |
| Village & Taluk | : திட்டக்குடி |
| Calling | : மருத்துவர் |
| Age | : 33 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.11.2025**

2 மற்றும் 3 எதிரி ஆஜர். 1ம் (எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317/ 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

நான் தற்போது அரியலூர் அரசு மருத்துவமனை மருத்துவ கல்லூரியில் குழந்தை நலப்பிரிவு மருததுவராக பணி செய்து வருகிறேன். கடந்த 29.01.2018 ம் தேதியன்று செஞ்சி அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணியில் இருந்த போது இரவு 08.00 மணிக்கு திரு.பரசுராமன் த.பெ. ராமசாமி என்பவர் சிகிச்சைக்குவந்தார். அவரை விசாரணை செய்ததில் அடையாளம் தெரிந்த 3 நபர்கள் அன்றைய தினம் இரவு 07.00 மணிக்கு பொன்பத்தி வயலில் வைத்து கல்லால் தாக்கியதாக சொன்னார். அவரை பரிசோதனை செய்ததில் அவர் சுயநினைவுடன் இருந்தார். பின்வரும் காயங்கள் காணப்பட்டன. 1. தலையின் நடுப்பகுதியில் 3x2x1 c.m அளவிலான கிழிந்த காயம் காணப்பட்டது. 2. இடது காது மடலில் 2x1 c.m அளவிலான சிராய்ப்பு காயம் காணப்பட்டது. அவருக்கு தேவையான சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்தேன். அவரது மருத்துவ ஆவணங்கள் என்னிடம் சமர்பிக்கப்பட்டன அதனை பரிசீலனை செய்ததில் CT brain எடுக்கப்பட்டிருந்தது. அதில் எந்த வித காயங்களும் காணப்படவில்லை தலையில் ஏற்பட்ட காயத்திற்கு தையல் மட்டும் போடப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை சொற்ப காயம் என காயச்சான்று வழங்கினேன். மேற்படி விபத்து

பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. அன்றை தினமே போது இரவு 08.05 மணிக்கு திரு.ஜெயக்குமார் த.பெ. ராமசாமி என்பவர் சிகிச்சைக்கு வந்தார். அவரை விசாரணை செய்ததில் அடையாளம் தெரிந்த 3 நபர்கள் அன்றைய தினம் இரவு 07.00 மணிக்கு பொன்பத்தி வயலில் வைத்து கல் மற்றும் கட்டையால் தன்னை தாக்கியதாக சொன்னார். அவரை பரிசோதனை செய்ததில் அவர் சுயநினைவுடன் இருந்தார். பின்வரும் காயங்கள் காணப்பட்டன. 1. இடது கண்ணத்தில் 3x2x1 c.m அளவிலான கிழிந்த காயம் காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து அவருக்கு தேவையான சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை சொற்ப காயம் என காயச்சான்று வழங்கினேன். மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவலர்கள் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. காயமடைந்த இரண்டு நபர்களும் யாருடைய வயலில் இருந்தபோது காயம் ஏற்பட்டது என்பதை என்னிடம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் அன்றைய தினம் இரவு 07.00 மணிக்கு நடைபெற்றதாக என்னிடம் கூறினார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்து சுமார் 1 மணி நேரம் கழித்து தான் அவர்கள் மருத்துவமனைக்கு வந்துள்ளனர் என்றால் சரிதான். காயமடைந்த இரண்டு நபர்களும் என்னிடம் அவர்களை கத்தியால் தாக்கியதாக கூறவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேடுகளில் காயங்களின் நிறத்தை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான், ஆனால் அவைகள் புதிய காயங்களாக இருந்ததால் அதனை குறிப்பிடவில்லை.

2. மருத்துவ ஆவணங்களை பரிசீலனை செய்து அதன் அடிப்படையில் பரசுராமன் என்பவருக்கு காயச்சான்று அளித்தேன். Discharge summary யை பரிசீலனை செய்தேனா என்றால் செய்தேன். மேற்படி நபர் எந்த மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்ற விவரத்தை நான் எனது அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காயமடைந்த நபர்கள் இருவரும் கரடுமுரடாண பாதையில் ஓடி தாமாக கீழே இருந்த கட்டுக்கலில் மோதிக்கொண்டால் காயச்சான்றில் குறிப்பிட்டுள்ள காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புகள் உள்ளது. காவலர்கள்

என்னை இவ்வழக்கு தொடர்பாக விசாரித்தனர். காயமடைந்த நபரின் மருத்துவ ஆவணங்களை காவலர்கள் என்னிடம் சமர்ப்பித்தனர். நான் சொல்வது போல் காவலர்கள் என்னை விசாரிக்கவில்லை என்றாலும், அவ்வாறு விசாரித்திருந்தால் அவர்களிடம் பரசுராமன் எந்த மருத்துவமனையில் மேல் சிகிச்சை எடுத்துக்கொண்டால் என்ற விவரத்தை குறிப்பிட்டிருப்பேன் என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

**Sd/-B.Vidhya,**

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.